**(2025-26-**ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

**SUBJECT CODE 25 PTM 206**

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே - 2026

எம். ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 75

இரண்டாம் பருவம் நேரம் : 3 மணி

**தொல்காப்பியம் - சொல்லதிகாரம்**

**பகுதி – அ (10x1=10** மதிப்பெண்கள்)

பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (K1)

1. ‘‘மன்னாப் பொருளும் …………… இயற்றே’’
   அ) காரண ஆ) அன்ன இ) அல்ல ஈ) சுட்டி
2. உரிமைப் பொருளாக வரும் வேற்றுமை உருபு எது?
   அ) ஐ ஆ) ஆய் இ) கு ஈ) அது
3. ‘‘அன்னென் இறுதி ………… கும்மே’’
   அ) ஆ ஆ) இ இ) உ ஈ) ஏ
4. உயர்திணைக்குரிய வினைமுற்றுகள் எத்தனை?
   அ) 12 ஆ) 23 இ) 32 ஈ) 41
5. ‘‘குருவும் கெழுவும் ………… கும்மே’’
   அ) இலன் ஆ) வளன் இ) நிறன் ஈ) திறன்

கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக. (K2)

6. ‘செப்பு’ – குறிப்புரைக்க.
7. ‘ஓம்படைக் கிளவி’ – பொருளுரைக்க.
8. ‘சொன்மை தெரிதல்’ - குறிப்புரைக்க.
9. ‘ஆங்க உரையசை’ – பொருள்தருக.
10. பிரிநிலை எச்சங்களின் இருவகைகளை எழுதுக.

பகுதி – ஆ **( 5 X 5 = 25** மதிப்பெண்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. **(K3)**

11. அ) பன்மைக்குரிய வழக்குகள் குறித்து விளக்குக.

    (அல்லது)

    ஆ) ஒன்றன்பால் ஈறு - பலவின்பால் ஈறு வேறுபடுத்துக.

12. அ) ஆறாம் வேற்றுமையின் பொருள் பாகுபாடுகளைச் சான்றுடன் விளக்குக.

    (அல்லது)

    ஆ) ஆகுபெயர் குறித்த தொல்காப்பியரின் சிந்தனைகளைப் பட்டியலிடுக.

(த.பி.பா.)

13. அ)விளியேற்கும் புள்ளி ஈறுகள் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) பெண்மை சுட்டியப் பெயர் - ஆண்மை சுட்டியப் பெயர் வேறுபடுத்துக.

14. அ) வினையெஞ்சு கிளவி குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) எண்ணிடைச் சொற்கள் குறித்து விவரிக்க.

15. அ) கம்பலை, சும்மை, கலி அழுங்கல் எனும் உரிச்சொற்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) இயற்சொல் - திரிசொல் இவற்றைச் சான்றுடன் வேறுபடுத்துக.

## பகுதி – இ ( 5 X 8= 40 மதிப்பெண்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K4/K5)**

16. அ) திணைக்குப் புறனடையாகத் தொல்காப்பியர் கூறும் கூற்றுகளைச் சான்றுகளுடன் ஆராய்க.

(அல்லது)

ஆ) இடம் குறித்த தொல்காப்பியரின் சிந்தனைகளை விளக்குக.

17. அ) “வேற்றுமை தாமே ஏழுஎன மொழிப” – வகைதொகை நோக்கில் ஆராய்க.

(அல்லது)

ஆ) வேற்றுமை மயங்கியலில் இடம்பெறும் பொருள், பெயர் குறித்து விவரிக்க.

18. அ) உயர்திணைப் பெயர்கள் விளியேற்கும் உயிர் ஈறுகள் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

ஆ) உயர்திணைப் பெயர் - அஃறிணைப்பெயர் குறித்த தொல்காப்பியரின் கூற்றுகளை விவரிக்க.

19. அ) அஃறிணை வினை பன்மை வினைமுற்று குறித்துச் சான்றுடன் விவரிக்க.

(அல்லது)

ஆ) முன்னிலை அசைச்சொற்கள் குறித்து விவரிக்க.

20. அ) உரிச்சொல்லின் பொது இலக்கணம் குறித்து ஆராய்க.

(அல்லது)

ஆ)தொல்காப்பியர் கூறும் பொருள்கோள்கள் படைப்பாக்க உத்திகளா? விளக்குக .

**********************